**செய்தி வெளியீடு எண் : 2036** **நாள் : 15.11.2022**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்திற்கு உருகொடுக்கும் வகையில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டு மானிய கோரிக்கையின் போது கீழ்கண்ட அறிவிப்பை வெளியிட்டார்.

**"ஆதிதிராவிடர் மாணாக்கர் தமது பள்ளிக் கல்வியை இடைநிற்றல் இன்றி தொடர்ந்திடும் வகையில், மிகவும் பழுதடைந்துள்ள, சேத்தியாதோப்பு, குளித்தலை, மீன்சுருட்டி, திருவண்ணாமலை மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வரும் 5 பள்ளி மாணவர் விடுதிகள் மற்றும் நிலக்கோட்டை, செய்யூர், வந்தவாசி, செஞ்சி மற்றும் திருப்பனந்தாள் ஆகிய இடங்களில் இயங்கி வரும் 5 பள்ளி மாணவியர் விடுதிகள் என மொத்தம் 10 விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய விடுதிக் கட்டடங்கள் ரூ. 45. 45 கோடி செலவில் கட்டப்படும்"**

மேற்படி அறிவிப்பினை நிறைவேற்றும் பொருட்டு பழுதடைந்த 10 ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவ மாணவியர் /விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் கட்ட ரூ.44.58 கோடிக்கு (ரூபாய் நாற்பத்து நான்கு கோடியே ஐம்பத்து எட்டு இலட்சம் மட்டும்) நிருவாக அனுமதி வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. **(அரசாணை (நிலை) எண். 106, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந2(1)) துறை, நாள். 11.11.2022.**

தமிழக அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் நலனுக்காக தொடர்ந்து செயல்படும்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in